
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JULY 03 2025

வியாழக்கிழமை 03, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 275 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## பேசாத பொம்மை சொல்லும் சோகக்கதை

முழுச் செய்தி P6

344 மில்லியன் டொலர்

# நிதியுதவிக்கு IMF அங்கிகாரம்




இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் நான்காவது மதிப்பாய்வை சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழு (IMF) அங்கீகரித்துள்ளது.

வொசிங்டனில் செவ்வாய்கிழமை(01) அன்று கூடிய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக, 2025 ஏப்ரல் 25ஆம் திகதியன்று சர்வதேச நாணய நிதிய பணியாளர்களும் இலங்கை அதிகாரிகளும், இலங்கையின் திட்டத்தின் 4ஆவது மதிப்பாய்வில் பணியாளர் அளவிலான உடன்பாட்டை எட்டியிருந்தனர்.

இந்தநிலையில், 4 ஆவது மதிப்பாய்வு, நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டதும், இலங்கைக்கு சுமார் 344 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கும்.

இதற்கான நிபந்தனையாகவே இலங்கையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டும் என்ற விடயம் சர்வதேச நாணய நிதியத்தினால் விதிக்கப்பட்டிருந்தமையும், அதனை அரசாங்கம் நிறைவேற்றியமையும் குறிப்பிடத்தக்கது.

## பிரபல அரசியல்வாதிகள் இருவர் கைதாகுவர்?



அரசியலில் பிரபலமடைந்த அரசியல்வாதிகளில் இருவர், இரண்டு நாட்களுக்குள் கைது செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்து அதிர்ச்சியான நடவடிக்கைகளில் ஈடுபட்ட இருவர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கிடைத்த சாட்சியங்களின் அடிப்படையில் இவ்விருவரும் கைது செய்யப்படவுள்ளனர் என்றும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## இந்தியா-சீனா மீது அமெரிக்கா 500% வரி?

ரஷ்யாவிடம் எண்ணெய், எரிபொருட்களை வாங்கும் சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் மீது 500% வரி விதிக்கக்கூடிய செனட் மசோதாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார்.

ரஷ்யா மீதான கட்டுப்பாடுகளை அதிகப்படுத்தும் இந்த புதிய மசோதாவை ஆதரித்து பேசிய அமெரிக்க செனட்டர் லிண்ட்சே கிரஹாம்,

தொடர்ச்சி P2



“நிர்ணய விலைகளை மீறி

## அரிசி விற்றால் அறிவிக்கவும்”

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கு தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபை இந்த இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அரசாங்கம் நிர்ணயித்த விலைகளுக்கு அதிகமாக அரிசியை விற்பனை செய்யும் சகலர் பற்றியும் இந்த இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி முறைப்பாடு செய்ய முடியும்.

தொடர்ச்சி P2

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில்

## முதலாவது பட்டப்படிப்பை தொடர் புலமைப்பரிசில்



க.பொ.த (உ/த) பரீட்சையில் உயர்வான தேர்ச்சியைப் பெறுகின்ற மாணவர்கள் தமது முதலாவது பட்டப்படிப்பை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்ற புலமைப்பரிசில் வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

அரச கொள்கைப் பிரகடனத்திற்கமைய “நாகரிகமான பிரஜை - முன்னேற்றகரமான மனிதவளத்தை” உருவாக்கும் நோக்கத்தை அடைவதற்காக 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட யோசனை மூலம் 200 மில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



‘City of Dreams’ திறப்பு விழாவில்

## பங்கேற்கும் ஷாருக் கான்

கொழும்பில் ஆகஸ்ட் 2ஆம் திகதி நடைபெறவுள்ள ‘City of Dreams Sri Lanka’ திறப்பு நிகழ்விற்கு ‘பொலிவூட் கிங்கஹான்’ என்று அழைக்கப்படும் சூப்பர் ஸ்டார் ஷாருக் கான் சிறப்பு விருந்தினராக இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

பொலிவூட் சினிமாவின் பல விருதுகளை வென்று மதிக்கப்படும் ‘கிங்கஹான்’ என்று அன்புடன் அழைக்கப்படும் சூப்பர் ஸ்டார் ஷாருக் கானின் வருகை, இந்த சிறப்பு மிகு திறப்பு விழாவுக்கு மேலும் ஒரு தனிச்சிறப்பை சேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

தொடர்ச்சி P2


## இரு தரப்பின் எழுத்துமூல சமர்ப்பிப்புக்கு நேரம் குறிப்பு



பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ.தேசபந்து தென்னக்கோனால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துர்நடத்தை மற்றும் பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை

தொடர்ச்சி P2

## ஆபாச வார்த்தைக்கு எதிராக நடவடிக்கை



ஆபாச வார்த்தைகளைப் பயன்படுத்தி கருத்து தெரிவிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை பொலிஸ் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் கருத்துகள் மற்றும் விமர்சனங்களை கவனத்தில் கொண்டு, இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை பொலிஸ் செயல்படுத்துவதாக பொலிஸ் பிரிவு ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

எனவே, இலங்கை பொலிஸின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பொதுமக்கள் தங்கள்

தொடர்ச்சி P2

# நோர்வூட் தவிசாளர் உபதவிசாளர் கடமையேற்பு



மு.ராமச்சந்திரன்


நோர்வூட் பிரதேச சபையின் செயலாளர் எஸ்.முரளிதரன் முன்னிலையில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பிரான்சிஸ் ஹெலன் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நடராஜ் சிவகுமார் ஆகியோர் தனது கடமைகளை புதன்கிழமை (02) அன்று உத்தியோகப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர்.

அவர்கள், டின்சின் நகர மத்தியிலிருந்து நோர்வூட் பிரதேச சபை வளாகம் வரை இசை வாத்தியம் முழங்க ஊர்வலமாக வருகை தந்து மும்மத சமயத் தலைவர்களின் ஆசியுடன் கடமையேற்றனர். இந்த கடமையேற்பின் போது, பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## “இ.தொ.கா. கனவு பலிக்காது”

மு.இராமச்சந்திரன்



தேசிய மக்கள் சக்தியுடனேயே எங்களது பயணம் தொடர்கிறது சமூக வலைத்தளங்களில் பரவியுள்ள காழ்ப்புணர்ச்சி கொண்ட பதிவுகள் போலியானவை என தெரிவித்துள்ள நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளர் பிரான்சிஸ் ஹெலன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கனவு பலிக்காது என்றார்.

தொடர்ச்சி P2

## “காங்கிரஸ் கைப்பற்றும்”



“நுவரெலியா மாவட்டம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், தேசிய மக்கள் சக்தியும் புரிந்துணர்வின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியமைத்துள்ளன எனத் தெரிவித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இந்தியா- சீனா மீது அமெரிக்கா 500% வரி?

"இந்த மசோதாவை வாக்கெடுப்புக்கு கொண்டு வர வேண்டும் என்று ட்ரம்ப் என்னிடம் கூறினார். உக்ரைன் மீதான போரில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை பேச்சுவார்த்தை மேஜைக்குக் கொண்டுவரும் ஒரு புதிய கருவியாக இந்த முயற்சி இருக்கும். ட்ரம்பின் இந்த முடிவு ஒரு பெரிய திருப்புமுனையாக இருக்கும்.

நீங்கள் ரஷ்யாவிலிருந்து பொருட்களை வாங்குகிறீர்கள், உக்ரைனுக்கு உதவவில்லை என்றால், அமெரிக்காவிற்குள் வரும் உங்கள் தயாரிப்புகளுக்கு 500% வரி விதிக்கப்படும் என்பதுதான் இந்த மசோதாவின் அடிப்படையாகும். இந்தியாவும், சீனாவும் புதினின் கச்சா எண்ணெயில் 70% வாங்குகின்றன. அவர்கள் அவரது போர் இயந்திரத்தைத் தொடர்ந்து இயக்குகிறார்கள். ரஷ்யா மீதான இந்த தடைகள் மசோதாவிற்கு எங்களிடம் 84 ஆதரவாளர்கள் உள்ளனர். எனவே அந்த மசோதா நிறைவேற்றப்படும் என்று நான் நினைக்கிறேன்." என்று கூறினார்.

எரிசக்தி மற்றும் சுத்தமான காற்று ஆராய்ச்சி மையத்தின் தகவல்களின்படி, மே 2025இல் ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் உள்ளிட்ட எரிபொருட்களை வாங்கும் இரண்டாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது. மே மாதத்தில் இந்தியா, ரஷ்யாவிலிருந்து 4.2 பில்லியன் யூரோ மதிப்புள்ள புதைபடிவ எரிபொருட்களை வாங்கியதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# அரிசி விற்றால் அறிவிக்கவும்"

இவ்வாறான தகவல்களை 1977 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும்.

ஒரு கிலோ பச்சை அரிசி 220 ரூபாவாகவும் ஒரு கிலோ சிவப்பு நாடு அரிசி 230 ரூபாவாகவும் ஒரு கிலோ கீரி சம்பா பச்சை அரிசி 260 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலைகளுக்கு அதிகமாக எவரும் அரசியை விற்றால் அது தண்டனைக்குரிய குற்றம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆபாச வார்த்தைக்கு எதிராக நடவடிக்கை

கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள கண்ணியமான மொழியைப் பயன்படுத்துமாறு பொலிஸ் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

ஆபாச வார்த்தைகளைப் பயன்படுத்துவது கருத்து தெரிவிப்பவரின் குணத்தை மட்டுமே சேதப்படுத்தும் என்று சுட்டிக்காட்டிய பொலிஸ் திணைக்களம், எதிர்காலத்தில் அத்தகைய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளது.

# பங்கேற்கும் ஷாருக்கான்

ஜோன்கீல்ஸ் ஹோல்டிங்ஸ் (JKH) மற்றும் மெல்கோ ரிசார்ட்ஸ் & என்டர்டெயின்மென்ட் இடையிலான கூட்டு முயற்சியின் ஒரு பகுதியான 'City of Dreams Sri Lanka', தெற்கு ஆசியாவின் முதல் முழுமையான ஒருங்கிணைந்த பொழுதுபோக்கு ஹோட்டல் வளாகமாகும். இது அனைத்து வசதிகளுடன் கூடியதாக உள்ளமை சிறப்பம்சமாகும்.

2025ஆம் ஆண்டில் தெற்காசியாவின் மிகவும் கவர்ச்சிகரமான நிகழ்வாக எதிர்பார்க்கப்படும் பலரால் பேசப்படும் இந்த திறப்பு விழாவுடன், இந்த விருப்பமான ஹோட்டல் வளாகத்தின் புதிய பிராண்ட் வர்த்தகமான 'Let's Go, Let Go' அதிகாரப் பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது ஆடம்பரமான மற்றும் பொழுதுபோக்கின் புதிய அத்தியாயத்தைத் தொடங்குகிறது, அங்கு பல்வேறு சுவையான மற்றும் உயர்தர உணவு மற்றும் பானவகைகள், நவீன ஹோட்டல் அறைகள், பிரீமியம் ரிலாக்சேஷன் மற்றும் ஸ்பா சேவைகள், உயர்தர ஷாப்பிங் அனுபவங்கள் மற்றும் வணிக நிகழ்வுகள் மற்றும் மாநாடுகளுக்கான விசாலமான வசதிகள் உள்ளிட்ட தனித்துவமான அனுபவங்களை வழங்கும். 'City of Dreams Sri Lanka' மெல்கோ ரிசார்ட்ஸ் & என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் ஒரு சர்வதேச தரத்திலான கேசினோவ சதியைக்கொண்டிருக்கும்.

மேலும், இது மெல்கோவின் பிரீமியம் 'Nwa' ஹோட்டல் பிராண்டை கொழும்பில் அறிமுகப்படுத்தி, நகரத்தின் வளர்ந்து வரும் ஹோட்டல் மற்றும் சுற்றுலாதுறைக்கு தனித்துவமான மதிப்பை சேர்க்கும்.

# பிரபல அரசியல்வாதிகள் இருவர் கைதாகுவர்?

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் இவ்விருவரும் கைது செய்யப்படவுள்ளனர் என்றும், இலஞ்சம் ஊழல் பற்றி இவ்விருவருக்கு எதிராகவும் கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

# முதலாவது பட்டப்படிப்பை தொடர் புலமைப்பரிசில்

இப்புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் சர்வதேச தரப்படுத்தல் குறிகாட்டிகளில் முதல் 500 இடங்களைப் பிடித்துள்ள, ஆங்கில மொழியில் கற்பித்தல்களை மேற்கொள்கின்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் 04 ஆண்டுகள் பட்டப்படிப்புக்களைப் பூர்த்தி செய்வதற்குப் புலமைப்பரிசில்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் முதலாம் கட்டத்தின் கீழ் 2025 ஆண்டுக்காக 20 தொடக்கம் 50 மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. க.பொ.த (உ/த) பரீட்சையில் பிரதான பாடத் துறைகளின் கீழ் உயர்வான இசட் புள்ளிகளை (Z-Score) பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

குறித்த விண்ணப்பங்களில் பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களுடன் கூடிய தேர்ச்சிக்கான நேர்முகத் தேர்வுக் குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும். அதற்கமைய, உத்தேச வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# நோர்வூட் தவிசாளர் உபதவிசாளர் கடமையேற்பு

நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் நோர்வூட் தொகுதி அமைப்பாளர் லலித் சுரவீர, உயர் பீட உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தியின் மஸ்கெலியா தொகுதி அமைப்பாளரும் அம்பகமுவ பிரதேச சபை தலைவருமான கபில நாகந்தல் தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளர் ஜி.நகுலேஸ்வரன் உட்பட ஆதரவாளர்கள் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

## "காங்கிரஸ் கைப்பற்றும்"

நோர்வூட் பிரதேச சபையைக் காங்கிரஸ் விரைவில் கைப்பற்றும் என்றும் உறுதியாக தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில், அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

குறிப்பாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதிகமான உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட சபைகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்வும், தேசிய மக்கள் சக்தி அதிகமான உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட இடங்களில் தேசிய மக்கள் சக்தியும் ஆட்சியமைக்கும் என்ற அடிப்படையில் இந்தப் புரிந்துணர்வு எட்டப்பட்டது.

குறிப்பாக நுவரெலியா மாநகர சபை, வலப்பனை, அங்குராகெத்த, தலவாக்கலை,ஹட்டன் டிக்கோயா நகரசபை, கொத்மலை ஆகிய இடங்களில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதாகவும், நுவரெலியா பிரதேச சபை,கொட்டகலை பிரதேச சபை, அக்கரப்பத்தன பிரதேச சபை, நோர்வூட் பிரதேச சபை ஆகிய இடங்களில் இ.தொ.கா ஆட்சி அமைப்பாகவும் புரிந்துணர்வு எட்டப்பட்டது.

இந்த நிலையில், நோர்வூட் பிரதேச சபையில் .இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஏனைய தரப்புடன் இணைந்து ஆட்சியமைத்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

நோர்வூட் பிரதேச சபையில் போட்டியிட்ட ஏனைய கட்சிகளை விட அதிகமான வாக்குகளைப் பெற்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முதலிடத்தைப் பெற்றதனால், மக்கள் ஆணையைத் தேசிய மக்கள் சக்தி மதிப்பதாகவும், மக்கள் ஆணையை நிலைநாட்டுவதற்கான தேவையான நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் இக்கலந்துரையாடலின் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமானிடம் தெரிவித்தனர்.

மேலும், விரைவில் நோர்வூட் பிரதேச சபையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். ஆட்சியமைக்கும்" என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

## "இ.தொ.கா கனவு பலிக்காது"

நோர்வூட் பிரதேச சபையின் தவிசாளராக பிரான்சிஸ் ஹெலன் கடமைகளை உத்தியோகபூர்வமாக, புதன்கிழமை (02) பொறுப்பேற்றுக்கொண்டார். அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நோர்வூட் பிரதேச சபைக்குப் போட்டியிட்டு ஆறு உறுப்பினர்களை வென்றெடுத்தோம் அதன் பின்னர் சபை தவிசாளர் , உப தவிசாளர் தெரிவிற்கான கன்னி அமர்வில் தவிசாளருக்கான போட்டியில் எனது பெயரும் பிரேரிக்கப்பட்ட நிலையில், 12 வாக்குகளைப் பெற்று தவிசாளராக தெரிவு செய்யப்பட்டேன் இது தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வெற்றியாக நான் பார்க்கிறேன்.

ஆனால், தேசிய மக்கள் சக்தியின் உயர் பீடத்துடன் முரண்பாடு ஏற்பட்டதால் உறுப்பினர்கள் சிலர் சுயேச்சையாக இயங்க போவதாகவும் சமூக வலைத்தளங்களில் போலியான செய்திகளை சில விசமிகள் பரப்பி வருகின்றனர்

இது முற்றிலும் போலியான தகவல் நாங்கள் ஆறு உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியுடனேயே தொடர்ந்து இருக்கிறோம். இருப்போம் இனி வருங்காலங்களில் தேசிய மக்கள் சக்தியின் ஊடாகவே நோர்வூட் பிரதேச சபையின் நடவடிக்கையை முன்னெடுப்போம்

அதேவேளை, ஊழல் நிறைந்த நோர்வூட் பிரதேச சபை இனி ஊழலற்ற சபையாக இயங்கும் என்பதோடு ஓரிரு மாதங்களில் நோர்வூட் பிரதேச சபையைக் கைப்பற்றுவோம் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கூறிக்கொண்டு இருப்பது வேடிக்கையானது.

நோர்வூட் பிரதேச சபையின் அதிகாரத்தைத் தேசிய மக்கள் சக்தி ஜனநாயக முறையில் நேர்மையாகக் கைப்பற்றியுள்ளது.

இவ்வாறிருக்க ஏன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கு விட்டுக்கொடுக்க வேண்டும், விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கிலேயே நோர்வூட் பிரதேச சபையில் இ.தொ.கா ஒரு மாதத்தில் ஆட்சியமைக்கும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உயர் பீடம் செய்திகளைப் பரப்பி வருவதாக ஹெலன் தெரிவித்தார்.

# இரு தரப்பின் எழுத்துமூல சமர்ப்பிப்புக்கு நேரம் குறிப்பு

தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழுவின் பிரதிவாதியான பொலிஸ்மா அதிபர் மற்றும் முறைப்பாட்டாளரின் சாட்சியங்கள் மீதான விசாரணைகள் செவ்வாய்க்கிழமை (01) அன்று முடிவுக்கு வந்தன.

உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேனவின் தலைமையில் மற்றும் நீதிபதி டபிள்யூ.எம். என்.பி.இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ஈ.டபிள்யூ.எம்லலித் ஏக்கநாயக்க ஆகியோர் அடங்கிய விசாரணைக் குழு முன்னிலையில் திங்கட்கிழமை (02) முறைப்பாட்டாளர் சார்பிலான இரண்டு சாட்சியாளர்கள் சாட்சியளித்திருந்தனர்.

உத்தியோகபூர்வ பணிக்காக வெளிநாடு சென்றிருந்த முறைப்பாட்டாளரின் சாட்சியாளர்கள் இருவரிடமிருந்து ஜூன் 26ஆம் திகதிக்குப் பின்னர் சாட்சிகளைப் பெற்றுக்கொள்ள சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விசாரணைக் குழுவில் கலந்துகொண்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி திலீப பீரிஸ் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரஜித பெரேரா மற்றும் பொலிஸ்மா அதிபரின் தரப்பினர் இணங்கிக் கொண்டதற்கு அமைய இந்த இரு சாட்சியாளர்களும் சாட்சியமளித்தனர். அத்துடன், இரு தரப்பின் எழுத்துமூல சமர்ப்பிப்புக்களையும் ஜூலை மாதம் 8ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு முன்னர் குழு முன்னிலையில் சமர்ப்பிப்பதற்கும் சட்டமாஅதிபரின் பிரதிநிதிகளும், பிரதிவாதியின் தரப்பினரும் இணங்கினர்.


# "என்னைக் கேலி செய்தவர்கள் இப்போது கேலிப் பொருளாகி விட்டனர்"



உலக பொருளாதார மன்றத்தில் அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி ஆற்றிய உரையில் அவரது ஆங்கிலப் பயன்பாடு சமூக ஊடகங்களில் பரவலான கேலிக்கு உள்ளான சர்ச்சைக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பதிலளித்துள்ளார்.

அம்பாறை, கோணகலவில் உள்ள ஸ்ரீ சுமங்கலராம விகாரையில் நடைபெற்ற மத நிகழ்வில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித், ஆங்கிலக் கல்வியை ஊக்குவித்ததற்காக ஒரு காலத்தில் தன்னை கேலி செய்தவர்கள் இப்போது தம் மீதான கேலி கிண்டல்களை எதிர்கொள்கின்றனர். "ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி நான் பேசியபோது, நான் கேலி செய்யப்பட்டேன். ஆனால் இன்று, அதே நபர்கள் கேலிப் பொருளாக மாறிவிட்டனர். நான் யாரையும் அவர்களின் ஆங்கிலத்திற்காக ஒருபோதும் கேலி செய்ததில்லை. நவீன உலகத்திற்கு நம்மை தயார்படுத்தத் தவறிய காலாவதியான கல்வி முறைதான் இங்கு உண்மையான பிரச்சினை. எதிர்க்கட்சியில் இருந்தபோதும், சக்வாலா திட்டத்தின் மூலம் கணினிகள், ஸ்மார்ட் போர்டுகள் மற்றும் அச்சுப்பொறிகளை நன்கொடையாக அளித்து பாடசாலைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்ததாகவும், ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பக் கல்வியின் மதிப்பை தொடர்ந்து வலியுறுத்தியது என்றார்.

# யோஷித-டெய்சி ஆச்சி மீது வழக்குப் பதிவு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பேத்தி டெய்சி பாரஸ்ட் விக்ரமசிங்க ஆகியோர் மீது பணச்சலவை சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் அபேரத்ன முன்னிலையில் புதன்கிழமை (02) அன்று குற்றப்பத்திரிகைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பின்னர், யோஷித ராஜபக்ஷவும் அவரது பேத்தி டெய்சி பாரஸ்ட் விக்ரமசிங்கவும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இருவருக்கும் சொந்தமான ரூ. 59 மில்லியன் கூட்டுக் கணக்கு தொடர்பாக, பணமோசடி சட்டத்தின் கீழ் அவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



# காளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்

கிழக்கிலங்கை காரைதீவு அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்தி பெருவிழா புதன்கிழமை (2) அன்று கோலாகலமாக நடைபெற்றது.

– வி.ரி.சகாதேவராஜா









# 20 மலசலக்கூடத் தொகுதிகளை நிர்மாணிக்க அங்கீகாரம்

அன்றாட நகரப் பிரதேசங்களுக்கு வருகை தருகின்ற பொதுமக்கள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு உரிய தரப்பண்புகளுடன் பயன்படுத்தக்கூடிய மலசலக்கூட வசதிகள் போதிய அளவு இன்மையால், உரிய தரப்பண்புகளுடன் பயன்படுத்தக்கூடிய மலசலகூட வசதிகளை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் உத்தேசிக்கப்பட்டுள்ள வசதிகளை நிறுவுவதற்கு வேண்டிய பொருத்தமான இடங்கள் நகர அபிவிருத்தி திட்டங்களுக்கமைய அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்தின் கீழ் சுகாதார நல வசதிகளுடன் கூடிய 20 மலசலக்கூட தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன், அதற்காக 525.29 மில்லியன் ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, தெமோதர புகையிரத நிலையம், சிகிரியா ஹோட்டல் சந்தி, கண்டி குளவீதி, நுவரெலியா க்றெகரி குளம், கிண்ணியா பளிங்குக், நிலாவெளிக் கடற்கரைகள், மட்டக்களப்பு பாசிக்குடா, ருவன்வெலிசாய விகாரை வாகனத் தரிப்பிடம் வளாகம், பொலன்னறுவை லங்காபுர, யாழ்ப்பாணம் குறிகட்டுவான் இறங்கு துறை, ஹிக்கடுவ கடற்கரை, ஹிரிவெட்டிய, திக்வெல்ல, தங்காலை பறைவெல்ல கடற்கரைப் பூங்கா, எல்ல ஒன்பது வில் வளைவு பாலம், பேருவள மொறகொல்ல கடற்கரை, கல்கிஸ்ஸை புகையிரத நிலையம் நீர்கொழும்பு கடற்கரை பூங்கா கருத்திட்டம், கட்டடம் ஐ, பத்தரமுல்ல சந்தி , குருநாகல் மடகமுவ சரணாலயம், ஆகிய இடங்களில் உத்தேச சுகாதார நல வசதிகளுடன் கூடிய மலசலக்கூட தொகுதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# அதிவேக நெடுஞ்சாலையில் கோர விபத்து; ஒருவர் பலி

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் புதன்கிழமை(02) அதிகாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 7 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சொகுசு பேருந்தொன்று மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச் சென்ற லொறியின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது, சொகுசு பேருந்தில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 07 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மின்சாரம் தாக்கி சிறுவன் உயிரிழப்பு

ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, முனைக்காடு கிராம ஆலயத்தில் வைத்து மின்சாரம் தாக்கப்பட்டு 16 வயது சிறுவன் உயிரிழந்த சம்பவம் புதன்கிழமை(02) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்தில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இடம்பெற்று வருவதுடன், புதன்கிழமை( 02) அதிகாலை விசேட பூசை இடம்பெற்ற நிலையில், பாம்புப் புற்றுக்கு பாலூற்றி விட்டு அதனருகில் நின்றபோது, அருகில் இருந்த மின் குமிழுக்கு இணைக்கப்பட்டிருந்த மின் வடத்திலிருந்த மின் ஒழுக்கு காரணமாக சிறுவன் மின்சாரம் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் முனைக்காடு கிராமத்தை சேர்ந்த 16 வயதான செந்தில்குமரன் கியோபன் என தெரிவிக்கப்படுகிறது



குறித்த சிறுவன் நாகதம்பிரான் ஆலயத்தில் சிறு வயது முதல் தொண்டாற்றி வருவதுடன், நல் ஒழுக்கமுள்ள இறை பக்தியுள்ள ஒருவர் என்றும் அவரது துரதிர்ஷ்டவசமான இழப்பு ஆலய நிர்வாகத்தையும் கிராம பொது மக்களையும் கவலை கொள்ளச் செய்கிறது. பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் ஒழுக்கமுள்ள மாணவனாக கலாசார வாத்திய இன்னிசைக் குழுவிலும் இணைந்து செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# விஸ்கி, சிகரெட்டுகளுடன் இரண்டு பேர் கைது

டி.கே.ஜி.கபில

சுமார் இரண்டு கோடி ரூபாய் பெறுமதியுடைய விஸ்கி மற்றும் சிகரெட்டுகளை சட்டவிரோதமாகக் கொண்டு வந்து, 'கிரீன் சேனல்' வழியாக கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியே கொண்டு வர முயன்ற இருவர் செவ்வாய்க்கிழமை (01) இரவு விமான நிலைய சுங்க அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் வர்த்தகர்கள் என தெரியவந்துள்ளதுடன், அதில் ஒருவர் கொழும்பில் வசிக்கும் 30 வயதுடையவர் எனவும் மற்றையவர் எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த 36 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் துபாயிலிருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளதுடன் அவர்களின் பயணப் பைகளை



சோதனையிட்டபோது, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 'மான்செஸ்டர்' சிகரெட்டுகள் 116,200 அடங்கிய 581 அட்டைப்பெட்டிகள், துபாய் விமான நிலைய வரி இல்லாத வணிக வளாகத்தில் இருந்து வாங்கப்பட்ட 117 விஸ்கி போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

# "எல்லை மீறினால் கைதுகள் தொடரும்

விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை"

"இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறினால் கைதுகள் தொடரும். படகுகள் பறிமுதல் செய்யப்படும். இது விடயத்தில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை" என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்

கொழும்பில் செவ்வாய்க்கிழமை (01) அன்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"இந்திய மீனவர்களின் அத்துமீறலானது எமது மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கே பாதகமாக அமைந்துள்ளது. இது தொடர்பில்



இந்தியத் தரப்புக்கும் தெரிவித்திருந்தோம். கடந்த மூன்று மாதங்களாக இந்திய மீனவர்களின் பிரச்சனை இருக்கவில்லை. தற்போது மீண்டும் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைய ஆரம்பித்துள்ளனர். அவர்களை நாம் கைது செய்தோம்.

இந்திய மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் மயிலிட்டி துறைமுகத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள. அவை அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளன.

தமிழக மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறுவதை நிறுத்த வேண்டும். அவ்வாறு இல்லையேல் கைதுகள் தொடரும். படகுகள் பறிமுதல் செய்யப்படும். உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கையிலும் இறங்கியுள்ளோம். கடற்படைக்குக் கூடுதல் வளங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தடுத்து நிறுத்தப்படும். இலங்கை கடற்படையினர் மிகவும் கட்டுக்கோப்பாகவே நடந்து வருகின்றனர்.

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளால்தான் இலங்கை கடல் வளம் நாசமாக்கப்பட்டுள்ளது. இந்நிலை தொடர்ந்தால் இலங்கை கடற்பரப்பு கடல் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளது" என்றார்.

# கொட்டியாகலையில் சடலம் மீட்பு

ரஞ்சித் ராஜபக்ஷ

பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டியாகலை தோட்டத்தின் கீழ் பிரிவிலுள்ள தேயிலைத் தோட்டத்தில் இருந்து அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் புதன்கிழமை (02) அன்று மீட்கப்பட்டது.

குறித்த தோட்டத்தில் தேயிலை பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் குழு குறித்த சடலத்தைக் கண்டு-பொலிஸாரிடம் தகவல் வழங்கியுள்ளனர்.

இந்த சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



# போதைப்பொருள் விற்ற ஜோடி கைது

எச்.எம்.எம்.பர்ஸான்

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கணவன், மனைவி இருவர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பன்சால வீதியில் வைத்து செவ்வாய்க்கிழமை (1) அன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீண்ட காலமாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த இவர்களை அதிரடிப்படையினரும் வாழைச்சேனை பொலிஸாரும் இணைந்து போதைப் பொருளுடன் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


## வாடகைக்கு

கல்கிசை டெம்பிள்ஸ் வீதியில், 3 படுக்கையறைகள் (ஒன்று ஏ.சி. வசதியுடன்), 2 கழிப்பறைகள், வேலையாட்கள் அறை, கழிப்பறை, கேரேஜ், சிறிய தோட்டம், கொண்ட ஒற்றை கட்டிடம், வீடு, மாதாந்தம் 75,000 - 80,000 வாடகைக்கு உள்ளது. தொடர்புகொள்ளவும்: 077-768 8144

# குழந்தையிடம் தவழ்ந்து சாட்சியான சிரிக்கும் பொம்மை

கண்களை திறந்தவாறு சிரித்துக் கொண்டே இருக்கும் பொம்மையொன்று, உலகத்தின் கவனத்தை ஈர்த்திருப்பது மட்டுமன்றி, மிகப்பெரிய மனித புதைக்குழி துயரத்தின் குறியீடாகவும் மாறியிருக்கின்றது என்பதே உண்மையாகும். ஒரு குழந்தையின் கைகளில் தவழ்ந்து, அதன் சிரிப்புக்கும் துள்ளலுக்கும் சாட்சியாக இந்த பொம்மை இருந்திருக்க வேண்டும்.

செம்மணி மனிதப் புதைகுழியில் பின்னிப்பிணைந்து ஐந்து எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அந்த எலும்புக்கூடுகளுடன் சிறு குழந்தையின் எலும்புக் கூட்டுடன் சப்பாத்து, குழந்தைகள் விளையாடும் சிறிய பொம்மையும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அப்படியானால், அந்த சிரிக்கும் பொம்மை, அக்குழந்தையுடையது. விட்டுவிடாது அக்குழந்தை, அந்த பொம்மையாக இறுகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

யாழ்ப்பாணம் - செம்மணி - சித்துபாத்தி மனித புதைகுழியிலிருந்து சிறுவர்கள் உள்ளிட்ட 33 பேரின் மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜூலை 1ஆம் திகதி நடத்தப்பட்ட அகழ்வு பணிகளின் போது மேலும் 5 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 38 மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிடமிருந்து யாழ்ப்பாணம் 1995ஆம் ஆண்டு காலப் பகுதியில் முழுமையாக மீட்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணம் பகுதியில் காணாமல் போனதாகக் கூறப்படுவோர் செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், செம்மணி பகுதியில் 1999ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வு பணிகளில் போது, அந்த பகுதியில் மனிதப் புதைகுழி காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த மனிதப் புதைகுழியிலிருந்து பெருமளவிலான மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருந்தன. இந்த செம்மணியை அண்மித்த பகுதியிலிருந்து தற்போது சித்துபாத்தி மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டு அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சித்துபாத்தி மனிதப் புதைகுழியிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டு வரும் மனித எலும்புக்கூடுகள் மற்றும் ஆதாரங்களைச் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சிலர் வெவ்வேறு விதங்களில் சித்தரித்து வருகின்றமையை சமூக வலைத்தளங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென எச்சரிக்கை பட்டுள்ளது.

இதுவரை அகழ்ந்து எடுக்கப்பட்டிருக்கும் மனித எலும்புக்கூடுகளைப் பார்க்கும்போது, கொத்துக் கொத்தாக கொன்று புதைக்கப்பட்டுள்ளனர் என கூறுவதை விட, பாரிய கிடங்கில் கொட்டப்பட்டுள்ளனர் என்றே கூறவேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கைக்கு விஜயம் செய்து, 'அணையா விளக்கு' போராட்ட களத்துக்குச் சென்று மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். அதுமட்டுமன்றி, செம்மணி சித்துபாத்தி புதைகுழிகளுக்கும் சென்று அவதானித்துள்ளார். குழந்தையிடம் தவழ்ந்து சாட்சியான சிரிக்கும் பொம்மையின் படத்தையும் சர்வதேசமே அவதானித்து இருக்கும். ஆகையால், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதுடன், குற்றவாளிகளுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுக்க ஆகக் குறைந்தது அழுத்தங்களையாவது கொடுக்கவேண்டும். தமிழ்த் தரப்பு விடுக்கும் சர்வதேச பொறிமுறை சிறந்தது. ஏனெனில், உள்நாட்டு பொறிமுறையில் கண்களை திறந்து கொண்டே சிரிக்கும் பொம்மையின் கண்களையும் மூடிவிடுவர்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# செம்மணி 'அணையா விளக்கு' போராட்டத்தில் வெற்றி பெற்ற சுயநல அரசியல்

முருகானந்தன் தவம்

செம்மணி படுகொலைக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்ட 'அணையா விளக்கு' போராட்டத்தின் இறுதி நாள் பெருமளவிலான மக்கள் பங்கேற்புடன் உணர்வெழுச்சியாக நடைபெற்ற நிலையில், அந்தப் போராட்டத்திற்கு தமது ஆதரவை தெரிவிக்கவும் அஞ்சலி செலுத்தவும் சென்ற தமிழ் அரசியல் வாதிகள் அங்கிருந்த கும்பல் ஒன்றினால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் தமிழர் தேசத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதுடன், அவ்வாறு தமிழ் அரசியல் வாதிகள் விரட்டியடிகப்பட்டமைக்கு கடும் கண்டனங்களும் எழுந்தன.

செம்மணியில் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட பெருமளவானோரின் எலும்புக்கூடுகள் செம்மணி சித்துபாத்தி பகுதியில் மீட்கப்பட்டுவரும் நிலையில், இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவிருந்த நிலையில், அவரினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்ப்பதற்காக மக்கள் செயல் அமைப்பின் ஏற்பாட்டில் அணையா விளக்கு போராட்டம் எனும் தொனிப் பொருளில் சர்வதேச நீதி கோரி கடந்த 23ஆம் திகதி முதல் மூன்று நாட்களாக மிகவும் எழுச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே இறுதி நாளான 26ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வரவிருந்த நிலையில், அதற்கு முன்னதாக அங்கு வந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், அதேகட்சியைச் சேர்ந்த இரா.சாணக்கியன் எம்.பி., கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், அவரின் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த எம்.பிக்களான ரஜீவன், இளங்குமரன் ஆகியோர் அங்கிருந்த குழுவொன்றினால் விரட்டியடிக்கப்பட்டனர்.

இவ்வாறு தமிழ் அரசியல்வாதிகளை விரட்டியவர்கள் எதற்காக அவர்களை விரட்டினோம் என்று தெளிவான காரணங்கள் எதனையும் குறிப்பிடவில்லை. யாழ்ப்பாணத்தில் பலர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என பகிரங்கமாகக் குற்றச்சாட்டப்பட்டுவரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினருடன் (ஈ.பி.டி.பி.) கூட்டுச் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் இலங்கை தமிழரசுக் கட்சி ஆட்சி அமைத்துள்ளதாகவும், அவ்வாறானவர்களுடன் கூட்டுச் சேர்ந்தவர்கள் இந்த போராட்டத்தில் கலந்துகொள்ளத் தகுதியற்றவர்கள் என்றும் கூறியே சிவஞானம், துரத்தியடிக்கப்பட்டதாக கூறப்படும் காரணம் சிவஞானம், சாணக்கியன் ஆகியோர் விரட்டப்பட்டமைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்தது.

அதேநேரம், இந்த செம்மணிப் படுகொலையுடன் சம்பந்தப்படாத, செம்மணியில் மனிதப் புதைகுழிகளை தோண்ட, அவை தொடர்பில் விசாரணை நடத்த அனுமதி வழங்கி, நிதியும் ஒதுக்கிய தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் எம்.பிக்களை அங்கிருந்து விரட்டியடிக்கக் காரணம் என்ன? ஒரு அரசின் அமைச்சர் அந்த அணையா விளக்கு போராட்டத்தில் பங்கேற்று ஆதரவு தெரிவித்து இவ்வாறு ஒரு படுகொலை சம்பவம் நடந்துள்ளது உண்மை. அதற்கு நீதி வேண்டுமெனக் கோருவது இந்தப்போராட்டத்திற்கான பெரும்பலம் அல்லவா? அவ்வாறானவர்களை ஏன் விரட்டியடித்தார்கள்?

செம்மணி 'அணையா விளக்கு' போராட்டத்தில் பங்கேற்ற மக்களினால் இவர்கள் விரட்டியடிக்கப்பட்டதாக சமூக ஊடகங்கள் பொறுப்பற்ற வகையில், செய்திகளை வெளியிட்டபோதும் அவ்வாறு அரசியல்வாதிகள் விரட்டியடிக்கப்பட்டமைக்கும் அந்த போராட்டத்தின் ஏற்பாட்டாளர்களுக்கும் அந்தப் போராட்டத்தில் பங்கு கொண்ட மக்களுக்கும் எவ்வித தொடர்புகளுமில்லை என்பதே உண்மை. இவ்வாறு தமிழ் அரசியல்வாதிகள் விரட்டியடிக்கப்பட்டமைக்கு போராட்ட ஏற்பாட்டாளர்களும் பொதுமக்களும் கடும் கண்டனமும் கவலையும் தெரிவித்துள்ளனர். அந்தப் போராட்டத்தினுள் அன்றையதினம் திட்டமிட்டுக் களமிறக்கப்பட்ட ஒரு சிறு கும்பலே இந்த அநாகரிக, அடாவடித்தனத்தில் ஈடுபட்டது. அந்த சிறு கும்பலின் பின்னணியில் இருந்தவர் யார்? என்பதே கேள்வி.

செம்மணி 'அணையா விளக்கு' போராட்டத்தைப் பயன்படுத்தி ஒரு சிறு கும்பல் தமிழ் அரசியல்வாதிகளை விரட்டியடித்ததைப் பயன்படுத்தி ஒவ்வொரு தமிழ் அரசியல் கட்சிகளும் தமது ஊத்தை அரசியலையே அந்த சம்பவம் தொடர்பில் முன்னெடுத்தன . இலங்கை தமிழரசுக் கட்சியின் சிவஞானமும் சாணக்கியனும் விரட்டியடிக்கப்பட்ட நிலையில், அவர்கள் தம்மை அவ்வாறு விரட்டியடித்ததன் பின்னணியில் தமது கட்சியைச் சேர்ந்த, கிளிநொச்சியில் பலம் பொருந்தியவரே இருந்ததாகக்கூறி சிறீதரன் எம்.பியை பலிக்கடாவாக்க முயன்றனர். இன்னுமொரு தரப்பினர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரன் மீது பழி போட முயன்றனர்.

ஆனால், அனைவரும் ஒன்றைக் கவனிக்காது விட்டனர். அல்லது கவனித்தும் கவனிக்காதிருந்து தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க முயன்றுள்ளனர் என்றே கூறவேண்டியுள்ளது. ஏனெனில், செம்மணி 'அணையா விளக்கு' போராட்டத்திற்கு வந்த தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் விரட்டியடிக்கப்பட்ட நிலையில், அர்ச்சுனா இராமநாதன் எம்.பி. மட்டும் எவ்வாறு பங்கு கொண்டார்? ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வந்தபோது, அர்ச்சுனா எம்.பி. தான் முன்னுக்கு நிற்கின்றார். மனித உரிமைகள் ஆணையாளருக்குப் பின்னாலேயே திரிகின்றார். படங்களுக்கு போஸ் கொடுக்கின்றார். தான் மட்டுமே தமிழ் மக்களின் பிரதிநிதிபோல் நடந்து கொள்கின்றார். தானே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அங்கு அழைத்து வந்ததாகக் கூறுகின்றார். (அதனை அவர் பின்னர் பாராளுமன்றத்திலும் கூறினார்). தமிழ் அரசியல்வாதிகள் விரட்டியடித்த அந்த சிறு கும்பல் அர்ச்சுனாவை மட்டும் விரட்டியடிக்காதது ஏன்?

அதுமட்டுமல்ல, ஒரு தடவை பாராளுமன்றத்தில் வைத்து அமைச்சர் சந்திரசேகர் "இந்த பைத்தியக்கார அர்ச்சுனா எம்.பியை தமிழ் மக்கள், யாழ் மக்கள் விரைவில் விரட்டியடிப்பார்கள்" என்று கூறியிருந்தார். செம்மணியில் அமைச்சர் சந்திரசேகர் விரட்டப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் பேசிய அர்ச்சுனா எம்.பி. "அமைச்சர் சந்திரசேகர் என்னை யாழ். மக்கள் விரட்டியடிப்பார்கள் என்று இங்கு கூறியிருந்தார். ஆனால், அவரைத்தான் யாழ் மக்கள் விரட்டியடித்துள்ளனர்" என்று கூறியதன் மூலம் அமைச்சர் சந்திரசேகர் செம்மணியில் விரட்டப்பட்டமை ஒரு திட்டமிட்ட அரசியல் பழிவாங்கலாகக்கூட இருக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

அதுமட்டுமல்ல, அணையா விளக்கு போராட்டத்தில் பங்கேற்ற தமிழ் அரசியல்வாதிகளை விரட்டிய அந்த சிறு கும்பலில் இருந்தவர்களில் சிலர், அர்ச்சுனா எம்.பியின் பின்னால் இருப்பதையும் வீடியோக்களில் அவதானித்திருந்தால் கண்டுபிடித்திருக்க முடியும். அல்லது தமிழ் அரசியல்வாதிகள் விரட்டியடிக்கப்படுவதற்கு முதல்நாள் இரவு 'ரிக்டொக்' கில் அர்ச்சுனாவும் அவரை வெளிநாடுகளிலிருந்து வழி நடத்தும் கும்பலும் நடத்திய கலந்துரையாடலைக் கேட்டிருந்தாலும், இந்த சம்பவத்தின் பின்னணியில் யார்?, எந்த அரசியல்வாதி?, எதற்காக இருந்தார்? என்பதனை இலகுவாகக் கண்டுபிடித்திருக்க முடியும்.

இதனை விடுத்து, தமது அரசியல் காழ்ப்புணர்ச்சி, வெறுப்பு, விரோதம் காரணமாக சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இன்னொருவரின் பெயரைக் கெடுக்க நினைக்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் துர் குணம் இன்னும் மாறவில்லை என்பதனையே 'அணையா விளக்கு' சம்பவம் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. தனது வீட்டு நாய்க்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டாலும், அதற்கு சிறீதரன் எம்.பியே காரணம் என்ற நிலைப்பாட்டிலேயே சாணக்கியன் எம்.பியின் அண்மைக்கால செயற்பாடுகள் அமைந்துள்ளன. அதன் அடிப்படையிலேயே அவர் எடுத்த எடுப்பில் கிளிநொச்சி நபர் என கூறி சிறீதரனுக்கு கை நீட்டுகின்றார்.

அண்மையில் ஆனையிறவு உப்பள ஊழியர்கள் போராட்டம் நடந்தபோதும், அதன் பின்னணியில் அரசியல்வாதி ஒருவர் இருந்து தூண்டி விடுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தபோது, அதன் பின்னணியில் சிறீதரனே இருப்பதாகப் பலரும் நினைத்த நிலையில், பாராளுமன்றத்தில் வைத்தே அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அர்ச்சுனா எம்.பியைப் பார்த்து அந்த போராட்டத்தினை தூண்டி விடுபவர் நீங்கள்தான். பின்னணியில் இருந்து நீங்கள்தான் குழப்பங்களை ஏற்படுத்துகின்றீர்கள் என நேரடியாகக் குற்றம்சாட்டியபோது, அர்ச்சுனா எம்.பி. சிரித்தவாறே அமர்ந்திருந்தார். அந்த போராட்டத்தில் இருந்த சிலரும் செம்மணியில் தமிழ் அரசியல்வாதிகளை விரட்டியடித்த குழுவில் இருந்ததை பலரும் பார்த்திருக்க வாய்ப்பில்லை.

ஆக செம்மணி 'அணையா விளக்கு' போராட்டத்தைப் பயன்படுத்தி தனது மாகாண முதலமைச்சர் கனவை நனவாக்க,, தான் தான் தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதி என காட்ட ஒருதரப்பு தமிழ் அரசியல்வாதிகளை விரட்டியடிக்கும் திட்டத்தைக் கையில் எடுத்து தனது குழுவை வைத்து அதனை நடைமுறைப்படுத்த, அவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள், விரட்டியடித்தவர்களை விட்டு விட்டு அந்த சம்பவத்தைப் பயன்படுத்தி தமது அரசியல் எதிராளிகளின் பெயரைக் கெடுக்க முயன்றனர். இதன்மூலம் 'அணையா விளக்கு' போராட்டத்தின் உண்மையான நோக்கம் தோற்கடிக்கப்பட்டு தமிழ் அரசியல்வாதிகளின் சுயநல அரசியல் வெற்றி பெற்றுள்ளது.



## வாழ்வியல் தரிசனம்

எதிரிகளுடன் ஒருபோதும் கடும் போக்குடன் நடந்துகொள்ளக் கூடாது. எதிரிகளுடனும் கூட, நாம் இணங்கிப் போகக் கூடிய குணாம்சங்கள் இருக்கும். அந்தக் குணாம்சங்களின் ஊடாக நாம் எதிரிகளுடன் பழகுவது வாழ்க்கையில் நிம்மதி பெருகத் தடை இருக்காது. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்ப்பது அவசியமில்லை. பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள். கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது, வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன், எவரையும் கனிவுடன் நோக்குவோம். உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்த தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்காது, பணிவுடன் பேசுவதே, நிரந்தர வெற்றிக்கு வழி!

மனிதனுடன் மட்டுமல்ல, மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களையும் பாசத்துடன் நோக்கினால், அவை உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள், அனுபவம் மூலம் உணர்வீர்கள். கர்வம், அகங்காரம், கோபம் போன்ற துர்க்குணங்கள் தனது, குடும்பம், அயலட்டை, கிராமம், தேசம் என்பவற்றின் நலனுக்கும் கேடானவை, பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததை செய்வதே மேன்மை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கட்டாக்காலி மாடுகளினால் இடைஞ்சல்

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் பகல் இரவு பாராது ஆக்கிரமித்துள்ள கட்டாக்காலி மாடுகள் தினமும் பொது போக்குவரத்திற்குத் தடை ஏற்படுத்தும் வகையில் நடமாடுவதாகவும் அப்பகுதிகளை சுகாதார சீர்கேடான இடங்களாக மாற்றுவதுடன் அப்பகுதியில் துர்நாற்றமும் ஏற்படுகிறது என பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். மேலும், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய, கல்முனை மாநகர சபை ,கல்முனை பிராந்திய சுகாதார பணிமனை, கல்முனை பிரதான பேருந்து தரிப்பிடம், இலங்கை மின்சார சபை ,கல்முனை பிரதேச செயலகம் ,வங்கிகள் ,உள்ளிட்ட பகுதிகளில் இரவு வேளையில் கட்டாக்காலி மாடுகள் நாய்கள் நடமாடுவதுடன் சேதங்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

பிரதான வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகளில் மாடுகள் படுத்துறங்குவது நிற்பது போன்றவற்றினால் போக்குவரத்துக்கு இடையூறாக ஏற்படுவதுடன் பொதுமக்களும் வாகன சாரதிகளும் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.இதனால் அன்றாடம் ஏற்படுகின்ற வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

- பாறுக் ஷிஹான்

(புதன்கிழமை தொடர்ச்சி...)



வி.கிருஷாந்தி
1ஆம் வருட
உளவளத்துணை
மாணவி,
NISD.



திருமணத்திற்கு முன்னரான

# உளவளத்துணை எனும் எண்ணக்கருவும் தற்காலத்தில் அதன் அவசியமும்

ஒரு நபர் மிகவும் மதவாதியாக இருந்தால், மற்றவர் மதச் செயல்களில் ஆர்வமில்லாதது கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தும்.

**7. பாலியல் மற்றும் பன்முக உறவுக் காட்சிகளுக்கான ஒத்துழைப்பு**

பாலியல் எதிர்பார்ப்புகள், அருகாமை, உடல் நெருக்கம், விருப்பங்கள் போன்றவை பற்றியதொரு திறந்த உரையாடல் முக்கியமானது. எதைக் கேட்பது சரி, எவ்வாறு தேவைகளை நிறைவு செய்வது என்பதைக் குறித்த புரிதலை உருவாக்க *Counselling* உதவுகிறது.

**8. குடும்ப உறவுகளின் தாக்கம் குறித்து தெளிவுபடுத்துதல்**

மாமனார்/மாமியார், அண்ணன்/தங்கை போன்ற உறவுகள் பற்றிய இடைமுகங்களில் ஏற்படக்கூடிய கருத்து முரண்பாடுகளைக் குறைக்க உதவுகிறது. உதாரணமாக ஒரு நபர் *'joint family'*இல் வாழ ஆசைப்படுகிறார், மற்றவர் தனிப் பிணைவை விரும்புகிறார் எனில் இங்கு இருவரது எதிர்பார்ப்புக்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

**9. கட்டுப்பாடு மற்றும் சுயதன்மையின் சமநிலை**

தங்களது தனிப்பட்ட இடம், தனிப்பட்ட நேரம், சுதந்திரம் என்பவற்றைப் பாதுகாப்பது அவசியம். *Premarital Counselling* ஒரு 'அருகாமை தூரம்' சீர்மிகு சமநிலையை நிலைநாட்ட உதவுகிறது.

**10. கோபத்தை நிர்வாகம் செய்தல் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறனை வளர்த்தல்**

கோபத்தை கட்டுப்படுத்தி நடந்து கொள்வது, விவாதங்களைத் தீர்க்கும் பாணிகள், மன்னிப்பு போன்றவைகள் குடும்ப உறவில் முக்கியம். அதிக உணர்ச்சிவசப்பாடு முரண்பாடுகளை உருவாக்குவதால் உறவுகளில் விரிசல் ஏற்படும். *Gottman Institute*-இன் 40 வருட ஆராய்ச்சியில், சிக்கல்களை சமாளிக்கும் திறனைப் பெற்ற *par couples*, பிறரைவிட நீண்ட காலம் இணைந்து வாழ்கிறார்கள் என கூறப்பட்டுள்ளது.

**11.விவாகரத்திற்கான வாய்ப்புகளை குறைத்தல்**

இன்றைய சமூகச் சூழலில், திருமணத்திற்குப் பின்னர் தோன்றும் பலவிதமான பிரச்சனைகளால் விவாகரத்துக்கள் கணிசமாக அதிகரித்து வருகின்றன. இத்தகைய விழிப்புணர்வு தேவைப்படும் நேரத்தில், இந்த நவீன குடும்ப வாழ்வில் நிலைத்த உறவுகளை உருவாக்கும் ஒரு அறிவூட்டலாக திருமணத்திற்கு முந்தைய உளவளத்துணை முக்கியத்துவம் பெறுகின்றது. திருமண வாழ்வில் தோன்றும் சிக்கல்களுக்கான ஒரே தீர்வாக விவாகரத்தையே கருதும் மனப்பாங்கு, சமூகத்தில் நாளுக்கு நாள் வேரூன்றிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றும் வலிமையான தீர்வாகவே திருமணத்திற்கு முந்தைய உளவளத்துணை அமைகிறது.

தம்பதியர்கள் தங்களது உறவுப் பிணைப்புகளை புரிந்து கொள்ள, எதிர்கால வாழ்வின் எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்த, மேலும் ஒத்துழைப்பு, தொடர்பாடல், மதிப்புணர்வு ஆகியவற்றில் தெளிவை ஏற்படுத்தும் வகையில் இது வழிகாட்டுகிறது. எனவே, திருமணத்திற்கு முன்னர் இந்த ஆலோசனையை பெறுவதே, ஒரு உறவின் மீதான ஆழ்ந்த புரிதல் மற்றும் உணர்வுப் பிணைப்பை உருவாக்குகிறது. *Amanda Kepler* (2015)இன் ஆய்வில் குறிப்பிடப்படுவது போல், "திருமணத்திற்கு முந்தைய உளவளத்துணையைப் பெற்ற தம்பதிகள், இதனைப் பெறாதவர்களை விட விவாகரத்திற்கான வாய்ப்பு குறைவாகவே காணப்படுகின்றது." திருமணத்திற்கு முந்தைய உளவளத்துணை பல வகையான பாணிகளிலும் அமையக்கூடியதாக இருந்தாலும், அதன் அடிப்படை நோக்கம் உறவுத் திறனை மேம்படுத்தி, திருமண வாழ்வை உறுதியானதாக்கும் பயணத்திற்கு வழிகாட்டுவது என்பது மாறாத உண்மை.

இன்றைய உலகில் திருமண வாழ்வு என்பது வெறும் சமூக மரபுகளின் பின்பற்றலாக இல்லாமல், உணர்வுப்பூர்வமான, நம்பிக்கையான, திட்டமிட்ட வாழ்வாக மாறியுள்ளது. இதற்கான அடித்தளமாகவே திருமணத்திற்கு முன்னரான உளவளத்துணை (*Premarital Counselling*) விளங்குகிறது.

உலகளாவிய ரீதியில், இது தம்பதிகளின் உறவை முன்னேற்றும், சிக்கல்களை தடுக்கும், மற்றும் உறவின் தரத்தை மேம்படுத்தும் ஒரு முக்கிய உளவியல் நடைமுறையாக அடையாளம் பெற்றுள்ளது. மேற்கத்திய நாடுகள் மட்டுமின்றி, தெற்காசிய மற்றும் இலங்கையிலும் இத்துறையின் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

திருமணத்திற்கு முந்தைய உளவளத்துணை என்பது ஒரு தடுப்பு நடவடிக்கையாக (*preventive tool*) செயற்படுகிறது. இது இருவருக்கும் நேர்மறை மற்றும் ஒரே நோக்கமுடைய tஎதிர்பார்ப்புகளை உருவாக்க, பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்க, மற்றும் எதிர்கால சிக்கல்களுக்கு தயாராக இருக்க உதவுகிறது. இலங்கையில் குடும்ப அமைப்புகள், கலாசார மதிப்பீடுகள், மற்றும் பாரம்பரிய உணர்வுகள் இன்னும் பல பகுதிகளில் முதன்மை வாய்ந்த பங்கு வகிக்கின்றன. இத்தகைய சூழலில், திருமணத்திற்கு முன்னரான உளவளத்துணையை ஊக்குவிப்பது மற்றும் இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது மிகவும் அவசியம்.

இதன் ஊடாக, குடும்பத் தரம் உயர்வதுடன், சமூக நலமும் மேம்படும். எனவே, தனிநபரின் மனநலம், உறவுப் பழக்கம் மற்றும் எதிர்கால வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் முக்கியமான முன்னெச்சரிக்கையான நடைமுறையாக, திருமணத்திற்கு முன்னரான உளவளத்துணை ஒருங்கிணைக்கப்பட வேண்டியது காலத்திற்கேற்ப உருவான அவசியமாகும்.

# அகஸ்தியர் பரம்பரை சித்தர் சுவாமிகள் இலங்கை வருகை



திருக்குற்றாலம் பொதிகை மலையனாறு ஸ்ரீலஸ்ரீ தென்னவன் முத்துக்குமார சுவாமிகள் வியாழக்கிழமை (03) அன்று இலங்கை வருகிறார்.


சுவாமிகள் அகஸ்தியர் பாரம்பரிய ஆன்மிக குடும்பத்தைச் சேர்ந்த, சித்தர் வழிபாட்டுடன் தொடர்புடையவர். அவர் கதிர்காம திருத்தலத்துக்கு விஜயம் செய்து அருளாசி வழங்கவுள்ளதோடு, 6ஆம் திகதி கொழும்பு மயூராபதி திருக்கோயிலில் நடைபெறும் தமிழ் பண்பாடு சர்வதேச மாநாட்டிலும் கலந்து கொள்கிறார்.


காஞ்சி மகா பெரியவர், திருமுருக கிருபானந்த வாரியார், சுவாமிகள் ஸ்ரீரங்கம் திருக்குறுங்குடி ஜீயர் மன்னார்குடி ஜீயர் ஆகியோரின் அருளுக்குப் பாத்திரமானவர்.

இவர் அகஸ்தியர் பாரம்பரிய சித்தர் வழிபாடு ஜீவநாடி அருள் வாக்கு ஜோதிடர். அன்னதானம் வழங்குவது இயலாத பேருக்கு கல்வி கொடுப்பது, கோயில் அறப்பணிகள் ஆகியவற்றை செய்வது இவரது பொது பணிகளாகும்.

தமிழ்ப் பண்பாடு – அனைத்துலக கொழும்பு மாநாட்டில்

# 'இன்னுமொரு குறிஞ்சிப் பூ' வெளியீடு



மாத்தளை மலரண்பன்

மாத்தளை எஸ்.மரதன் கிருஷ்ணன் எழுதிய 'இன்னுமொரு குறிஞ்சிப் பூ' என்ற கவிதை தொகுதியின் வெளியீட்டு விழா, வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில் பண்பாட்டு கலையரங்கத்தில் ஜூலை 6ஆம் திகதி பகல் 11.00 மணிக்கு நடைபெறும்.

மானிப்பாயில் பிறந்து மூன்று தசாப்தங்களாக மாத்தளையை தன் மண்ணாகவே மதித்து மலையக மக்களின் உணர்வுகளோடு ஒன்றிய பெருமகனாக லண்டனில் வாழ்ந்து முல்லைத்தீவில் மரணமுற்ற அமரர் கவிஞர் பொன்னம்பலம் புவனபாலன் அவர்களின் மலையகப்பற்றுக்கு மாண்பளித்து அவருக்கு இந் நூலை சமர்ப்பணம் செய்துள்ளார்கள் வெளியீட்டாளர்கள்.

மலையகத்தின் எழுத்து இயக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து எழுத்தாளர்களுமே வஞ்சிக்கப்பட்ட மலையக மக்களின் எதிர்ப்புக்குரலையே ஒலித்துள்ளனர். மலையகத்தில் எழுந்த சிறு பாட்டுப்புத்தகங்களிலிருந்து நவீன கவிஞர்கள் வரை இந்த கலக குரலை நாம் கேட்க முடிகிறது. கல்வித் தேடலும், சமூக பற்றுணர்வும் மிக்கவராக நான் நேசங் கொண்டிருந்த கிருஷ்ணன், 'இன்னுமொரு குறிஞ்சிப் பூ' என்ற கவிதை தொகுப்போடு ஒரு கவிஞராக பூத்திருக்கிறார். வார்த்தை ஜோடனைகள் இல்லாமல் எளிய மக்களின் மொழியில் புழுதி மண்ணின் வெக்கையை, சூழவும் நிகழும் கொடூரங்களின் புன்மையை, இன, மொழி வேறுபாடுகள் சமூகங்களின் நல்லிணக்க வாழ்வை சிதைத்த அவலத்தை இயல்பாக மக்களின் கவனத்திற்கு கொண்டு வருவதில் கவிதை அவருக்குக் கை கொடுத்திருக்கிறது. செழுமை மிக்க மலையகக் கவிதை மரபிற்கு மணியாரம் சேர்த்திருக்கின்றார் கிருஷ்ணன் என பேராசான் மு. நித்தியானந்தன் - மரதன் கிருஷ்ணன் மாத்தளையின் கலகக் குரல் என்ற தலைப்பில் எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

மாத்தளை பெருமைக்குரிய இலக்கிய மரபை கொண்டது. எஸ்.நடேசன், மாத்தளை அருணேசர், ஈழக்குமார், ஈழவாணன், கே.வேலாயுதம் மலரன்பன், மாத்தளை வடிவேலன், மாத்தளை சோமு, மாத்தளை, ஏ.எம்.எம்.புவாஜி, மாத்தளை கார்த்திகேசு, பி.கே.கோவிந்தராஜ், வீ.தங்கராஜ், உக்குவளை அக்ரம், பாலரஞ்சனி ஜெயபால், வீ.ஆர்.வயலட், பண்ணாமத்து கவிராயர் மாத்தளை அல்.அசூமத், லரீனா அப்துல் ஹத், என்.எம்.நஜுமுதீன், மாத்தளை கவிஞர் பாலா என்று நீண்ட மரபுக் கொண்ட மாத்தளையின் இலக்கிய வரலாற்றில் மரதன் கிருஷ்ணனும் இணைவதில் நான் பெருமை கொள்கின்றேன் என கலை ஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளையின் வெளியீட்டளர் எச்.எச்.விக்கிரமசிங்க தனது வெளியீட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் .

இந்த வெளியீட்டு விழாவில் புரவலர் ஹாசிம் உமர், பேராசிரியர் தை.தனராஜ் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.



தி.டிலக்சன்,
யாழ். பல்கலைக்கழகம்,
அரசறிவியல் துறை.

## பேசாத பொம்மை சொல்லும் சோகக் கதை:

# செம்மணியின் ஆழங்கள்

மனித வரலாற்றின் இருண்ட பக்கங்களில் வார்த்தைகளால் விவரிக்க முடியாத துயரங்களும் காலத்தால் அழியாத வலிகளும் புதைந்து கிடக்கின்றன. அந்தப் பக்கங்களில் ஒன்றுதான் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள செம்மணி என்ற நிலப்பரப்பு.

அங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு குழந்தையின் பொம்மை வெறும் விளையாட்டுக் கருவியாக இல்லாமல், கண் விழித்த சாட்சியாக நின்று செம்மணியின் ஆழங்களில் புதைந்துள்ள ஒரு சோகக் கதையை உலகுக்கு உரக்கச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பொம்மை உருக்குலைந்த நிலையில் மண்ணின் நிறம் பூசி ஒருபுறம் நீலமும் மறுபுறம் செம்மண்ணின் தடயங்களுமாய் கிடக்கிறது. ஆனால், அதன் கண்களைப் பாருங்கள் அவை இன்னும் திறந்திருக்கின்றன. ஒரு குழந்தையின் கைகளில் தவழ்ந்து அதன் சிரிப்புக்கும் துள்ளலுக்கும் சாட்சியாய் இருந்திருக்க வேண்டிய அந்தப் பொம்மை, இன்று ஒரு பெரும் துயரத்தின் குறியீடாக மாறிநிற்கிறது. செம்மணி மனிதப் புதைகுழியில் கண்டெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான எலும்புக் கூடுகளுக்கு மத்தியில் ஒரு மழலையின் அடையாளம் என்னவாக இருக்க முடியும்? இந்தக் கேள்விக்கு அந்தக் குட்டிப் பொம்மை தரும் விடை நம் மனசாட்சியை உலுக்கும் வல்லமை கொண்டது.

செம்மணி, இலங்கையின் நீண்டகால உள்நாட்டுப் போரின் கோரமான வடுக்களில் ஒன்று. 1990களில் நடந்த இறுதிக்கட்டப் போரின்போது, யாழ்ப்பாணம் ஒருபோர் முனையாய் மாறியிருந்தது. அமைதியையும் சமாதானத்தையும் மட்டுமே எதிர்பார்த்திருந்த மக்கள் மரணத்தின் நிழலில் வாழ்ந்து கொண்டிருந்தனர். அப்பாவி மக்கள் காணாமல் போவதும் அவர்களின் சடலங்கள் அடையாளம் தெரியாமல் புதைக்கப்படுவதும் அன்றாட நிகழ்வுகளாக மாறின. அந்தச் சூழலில்தான் செம்மணி என்ற நிலப்பரப்பு மனிதப் புதைகுழியாக வெளிச்சத்துக்கு வந்தது.

ஒரு பொம்மை ஏன் அங்கே இருக்க வேண்டும்? அதன் உரிமையாளர் யார்? இந்தப் பொம்மைக்கு உயிர் கொடுத்த குழந்தை எங்கே? இத்தகைய கேள்விகள் செம்மணியின் சோகக் கதையை மேலும் கனமாக்குகின்றன.

போரில் காணாமல் போன அல்லது கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கான



அப்பாவித் தமிழர்களின் பிரதிநிதியாகவே அந்தப் பொம்மை நிற்கிறது. அதன் திறந்த கண்கள் கடைசியாக என்ன கண்டனவோ என்ன துயரத்தைக் கண்டனவோ என்பதை நாம் அறியோம். ஒரு குழந்தை தன்னுடைய பொம்மையைப் பிரிய மனமில்லாமல் இறுதிக் கணங்கள் வரை அதை இறுக்கிப் பிடித்திருக்கலாம். அல்லது அந்தக் குழந்தையின் பெற்றோர் தங்கள் அன்பு மகளின் கடைசி நினைவுச் சின்னமாய் அதை வைத்திருந்திருக்கலாம் புதைத்திருக்கலாம். எதுவாக இருந்தாலும் அந்தக் குட்டிப் பொம்மைக்குள் அடங்கியிருக்கும் துயரம் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கு நம்பிக்கையையும் அதேவேளையில், ஆழ்ந்த வேதனையையும் கொடுத்தன. தங்கள் அன்புக்குரியவர்கள் அங்கே புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சாத்தியக்கூறு அவர்களுக்கு ஒரு வித மூடுண்ட நிம்மதியையும் மறுபுறம் உண்மைகளை அறிந்து கொள்ளும் பேராவலையும் தூண்டியது. ஆனால்,அந்த எலும்புக் கூடுகளுக்கும் இந்தப் பொம்மைக்கும் நடுவில் மர்மம் ஒரு பெரும் திரையாகப் படர்ந்திருக்கிறது.

இந்தப் பொம்மை போர் நடத்திய சக்திகளின் அத்துமீறல்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் ஒரு பேசாத சாட்சி. அதன் விழித்த கண்கள் இன்றும் நீதிக்காகக் காத்திருக்கும் மக்களின் ஏக்கத்தைப் பிரதிபலிக்கின்றன. ஒருபோரில் குழந்தைகள் எந்தப் பாவமும் அறியாதவர்கள். அவர்களுக்கு எந்தவிதப் பகையும் இல்லை.



ஆனால், போரின் கோரப்பிடி அவர்களைத் துயரத்தில் ஆழ்த்தி அவர்களின் இளம் பருவத்தை சூறையாடுகிறது. செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட இந்தப் பொம்மை போரின் கொடூரமான விளைவுகளை நினைவூட்டும் ஒருகருப்பு அத்தியாயத்தின் அடையாளமாக மாறியுள்ளது.

இலங்கையின் போர் முடிவுக்கு வந்திருந்தாலும் செம்மணி போன்ற இடங்களின் ஆறாத காயங்கள் இன்றும் தமிழ்ச் சமூகத்தின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளன. நீதி மறுக்கப்பட்டு உண்மைகள் புதைக்கப்பட்டிருக்கும் வரை இந்தப் பொம்மை போன்ற அடையாளங்கள் நிம்மதியற்ற ஆவிகளைப் போலவே நம்மைத் தொடரும். காணாமல் போனவர்களின் உறவினர்கள் இன்றும் நீதிக்காகக் காத்திருக்கின்றனர். தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிவரும் நாள் எப்போது என்ற கேள்வி அவர்களின் கண்களில் நீர்த்துளிகளாய் படிகிறது. செம்மணிப் பொம்மை வெறும் ஒரு பொம்மை அல்ல. அது மனிதத்தின் அழிவையும் போரின் கோர முகத்தையும் அப்பாவி உயிர்களின் பலியையும் சித்திரிக்கும் ஒரு குறியீடு. அதன் விழித்த கண்கள் இன்றும் உலகை நோக்கி, “எங்களை ஏன் கைவிட்டீர்கள்?” என்று கேட்பது போல் உள்ளன. இது சர்வதேச சமூகத்திற்கு ஒரு நினைவூட்டல்.போர்கள் எப்போதுமே அழிவையும் வேதனையையும் மட்டுமே கொண்டு வரும். போர்களின் விளைவுகள் தலைமுறைகளைக் கடந்து நிற்கும்.

செம்மணியில் புதைக்கப்பட்ட உண்மைகள் வெளிவரவேண்டும். நீதிக்கான போராட்டம் தொடர வேண்டும். இந்தப் பேசாத பொம்மையின் குரல் உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு மனிதனின் மனசாட்சியிலும் ஒலிக்க வேண்டும். ஒருபொம்மை சொல்லும் இந்த சோகக் கதை இனி எந்தக் குழந்தையின் சிரிப்பையும் அதன் பொம்மையின் கனவையும் போரில் இழக்காத ஒரு எதிர்காலத்தை நோக்கி நம்மை இட்டுச் செல்ல வேண்டும். செம்மணியின் ஆழங்களில் இருந்து வெளிப்படும் இந்தப் பேசாத குரல் அன்றும் இன்றும் கண் விழித்து போரின் கொடூரத்தைப் பதிவு செய்து கொண்டே இருக்கிறது. மனிதகுலத்தின் கூட்டு மனசாட்சியைத் தட்டி எழுப்பி போரற்ற உலகை உருவாக்கும் உத்வேகத்தைத் தரவேண்டும்.

“செம்மணியின் ஆழங்களில் இருந்து கேட்கும் இந்தப் பேசாத பொம்மையின் குரல் நம் அனைவருக்கும் ஒரு பாடம், கடந்த காலத்தின் வலிகளில் இருந்து கற்று, எதிர்காலத்தை அமைதியாய் கட்டமைப்போம்! அந்த மழலையின் கண்கள் மூடும்வரை நியாயம் வெல்லும் வரை நாம் ஓயோம்!”

‘எங்களை ஏன் கை விட்டீர்கள்?’

## ‘ஓம்’ இன்றிய கதிர்காமம்

# தமிழ் மக்களிடமிருந்து கைநழுவிப் போகின்றதா?

வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா

கதிர்காமத்தில் தமிழ் மக்களது பாரம்பரியங்கள் மற்றும் அவர்களது மடங்கள் அடையாளங்கள் அழிக்கப்பட்டமை காரணமாகத் தமிழ் மக்களுக்கும் கதிர்காமத்திற்கும் இடையிலான உறவில் இடைவெளி ஏற்பட்டது என்பது அண்மைக் காலமாகக் கூறப்பட்டு வருகிறது.

எனினும், யாழ். செல்வச்சந்நிதி தொடக்கம் வடக்கு கிழக்கு மலையகம் என நாடெங்கிலும் இருந்து பாதயாத்திரை மற்றும் ஏனைய வழிகளில் தமிழர்கள் இலட்சக்கணக்கில் கதிர்காமம் சென்று வருகின்றனர்.

இப் பாதயாத்திரை மறுசீரமைக்கப்பட வேண்டும்; வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் வருடாவருடம் உற்சவ காலப்பகுதியில் கூறுவார்கள். பின்னர் அந்த வேகம் குறைந்து விடும். இம்முறை 50 வீதமானோர் பௌத்தர்கள் சப்பாத்து கண்ணாடி சகிதம் சுற்றுலாப் பயணிகள் போல, பயணித்த தையும் காணமுடிந்தது. ஆனால் வெள்ளைக்காரர்கள் எம்மவர் போல் வேட்டியுடன் திலகமிட்டு பயணித்ததையும் காணமுடிந்தது. எம்மவர்களில் சிலர் பைலாக கும்மாளம் என்று பயணித்தமையும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது

அந்தக் காலத்தில் தமிழருக்கும் கதிர்காமத்திற்கும் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. எனினும் இந்தத் தொடர்பு 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் குறைவடைந்தது, இடைவெளி ஏற்படத் தொடங்கிவிட்டது.

இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

குறிப்பாக கதிர்காமத்தில் காணப்பட்ட இராமகிருஷ்ண மிஷன் மடத்தை, அரசாங்கம் சுவீகரித்துக்கொண்ட பின்னர், தமிழ் மக்கள் அங்கே செல்வதைக் குறைத்துக் கொண்டார்கள்.

குறித்த கதிர்காமம் இ.கி.மடம் 1953இல் பிரதமர் டட்லி சேனநாயக்காவால் திறந்து வைக்கப்பட்டது.

1943ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல அமைப்புகள் கதிர்காமத்தில் உள்ள புனித ஆலயத்திற்கு வரும் ஆயிரக்கணக்கான யாத்திரீகர்களுக்கு சேவை செய்யத் தொடங்கியது. அதன் ஓரங்கமாக உலகளாவிய ரீதியில் வியாபித்து ஜீவசேவையாற்றிவரும் இராமகிருஷ்ண



மிஷன் அமைப்பும் கதிர்காமத்தில் காலூன்றியது.

அதன் காரணமாக விசாலமான கட்டிடங்கள் கட்டப்பட்டு ராமகிருஷ்ண மிஷன் மடம் 1953ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் திகதி அப்போதைய இலங்கைப் பிரதமராக இருந்த மாண்புமிகு டட்லி சேனாநாயக்க அவர்களால் முறையாகத் திறந்து வைக்கப்பட்டது.

அப்போதிலிருந்து, மத வேறுபாடின்றி யாத்ரீகர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்பட்டது.

ஜூலை - ஆகஸ்ட் மாதங்களில் நடக்கும் வருடாந்த திருவிழாவின் போது, 17 நாட்களுக்குத் தொடர்ச்சியாக, ஒரு நாளைக்குப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட (10,000) யாத்ரீகர்களுக்கு இலவச உணவை மிஷன் வழங்கியது. மத விரிவுரைகள், சொற்பொழிவுகள் மற்றும் பஜனைகள் மடத்தில் வழக்கமான நடவடிக்கைகள் 1976ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படும் வரை மிஷன் ஒரு குடியுரிமை சுவாமியின் மேற்பார்வையின் கீழ் அதன் உன்னத சேவைகளைத் தொடர்ந்தது. அத்தகைய உன்னத ஜீவ சேவையாற்றிய இகிமிசன் மடத்தை மீண்டும் ஒப்படைத்து சமாதான பூமி புனித பூமி என்ற வாசகத்திற்கு அர்த்தம் சேர்க்குமாறு உலக இந்துக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்து கலாசார அமைச்சு திணைக்களம் அங்கு யாத்ரீகர்கள் விடுதியை அமைத்திருந்தாலும் அதிலும் தென்பகுதி மக்களே முன் பதிவுகளைச் செய்து கொள்வதால், தமிழ் மக்கள் அங்கே வந்து தங்குவதற்கு இடம் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இந்து யாத்திரீகர் விடுதியில் பெரும்பாலும் உற்சவம் தொடங்க முன்பே முன்பதிவுகள் பூர்த்தி அடைந்து விடும். அன்னதானம் நடப்பதால் அவர்களுக்கு பொது மண்டபங்கள் ஒதுக்கப்படுகின்றன

சிலவேளைகளில் பெரஹரா கலைஞர்கள் தங்குவார்கள்.

அதாவது இந்துக்கள் உணர்வோடு தங்க அங்கு இடமில்லை.

அன்று கதிர்காம வாசலில் ‘ஓம் முருகா’ என தமிழில் வாசகம் காணப்பட்டது. ஆனால், தற்போது ‘ஓம்’ என்றை சொல்லி நீக்கிவிட்டார்கள். இன்றும் முகப்பில் ஓம் இல்லை. அதேபோன்று, கதிர்காம கந்தன் மீது பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாடப்பட்ட திருப்புகழை அங்கே பாடுவதை தற்போது நிறுத்திவிட்டார்கள். தமிழ் மக்கள் மலையேறுவதற்குச் சென்றால், அங்கே இருக்கும் வாகன ஓட்டுநர்கள் கட்டுப்பாடற்ற முறையில், வாடகை பணம் வசூலிக்கின்றார்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றம், யாத்திரிகர் மடத்தை அமைப்பதற்குக் கதிர்காம ஆலய நிர்வாகம் காணியொன்றை வழங்க வேண்டும். கதிர்காம கந்தனது அற்புதங்கள் பெருமைகள் ஆய்வுகள் தொடர்பான தமிழ்ப் புத்தகங்களை அங்கே காட்சிப்படுத்த வேண்டும்.

ஆலயத்தின் வாசகங்களையும் அறிவித்தல்களையும் தமிழ் மொழியிலும் காட்சிப்படுத்த வேண்டும். இன்று அவை நடக்காமலில்லை. எனினும் போதுமானதாக இல்லை.

இதனை முன்னர் ஒரு தடவை தெல்லிப்பழை துர்கா தேவஸ்தானத்தின் தலைவர் ஆறுதிருமுகனும் தெரிவித்திருந்தார்.அத்துடன், கதிர்காமத்தில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாத்திரிகள் தங்குமிடம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான காணியைக் கதிர்காம ஆலய நிர்வாகம் வழங்க வேண்டும்





எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால், அந்த கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கிறது.

இனசௌன்யம் நல்லிணக்கம் ஐக்கிய சமாதான பூமி பற்றிப் பேசுகின்ற அதேவேளை மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுக்க வேண்டும் என்பது இக் கட்டுரையின் நோக்கமாகும்.








# கதிர்காம ஆலய வருடாந்த பெரஹரா

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த பெரஹரா செவ்வாய்க்கிழமை (1) அன்று இரவு 6ஆவது நாளாக நடைபெற்றது, இந்த பெரஹரா ஊர்வலத்தைக் காண ஏராளமான பக்த அடியார்கள் திரண்டு வந்திருந்தனர்.
















வொஷிங்டன்

### காசாவில் 60 நாள் போர் நிறுத்தம்

# நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புதல் என்கிறார் ட்ரம்ப்

‘காசாவில் 60 நாள் போர்நிறுத்தத்தை இறுதி செய்வதற்கான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது. போரை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து தரப்பினருடனும் இணைந்து நாங்கள் பணியாற்றுவோம்’ என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் தெரிவித்தார்

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைத்தள பதிவில், “எனது பிரதிநிதிகள் இன்று காசா தொடர்பாக இஸ்ரேலியர்களுடன் பயனுள்ள சந்திப்பை நடத்தினர். காசாவில் 60 நாள் போர் நிறுத்தத்தை இறுதி செய்வதற்குத் தேவையான நிபந்தனைகளுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது, அதே நேரத்தில் போரை முடிவுக்குக் கொண்டுவர அனைத்து தரப்பினருடனும் நாங்கள் இணைந்து பணியாற்றுவோம்.

போர் நிறுத்தம் ஏற்படக் கடுமையாக உழைத்த கத்தார் மற்றும் எகிப்தியர்கள், இதற்கான இறுதி திட்டத்தை வழங்குவார்கள். மத்திய கிழக்கின் நன்மைக்காக, ஹமாஸ் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். இல்லையெனில் நிலைமை சிறப்பாக மாறாது, மோசமாகிவிடும்” என்று கூறி, போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு ஹமாஸை எச்சரித்தார்.

காசா போர் நிறுத்தம், ஈரான் மற்றும் பிற விடயங்களைப் பற்றி அமெரிக்க மூத்த நிர்வாக அதிகாரிகளுடன் இஸ்ரேலிய அமைச்சர் ரான் டெர்மர் செவ்வாய்க்கிழமை (01) வொஷிங்டனில் ஆலோசனை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

காசாவில் உணவுக்காக நிவாரண முகாம்களுக்கு வரும் பாலஸ்தீனியர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் மற்றும் கொடிய வன்முறை காரணமாக, சேவ் தி சில்ட்ரன், அம்னஸ்டி இன்டர்நேஷனல் மற்றும் ஆக்ஸ்பாம் போன்ற 150க்கும் மேற்பட்ட உதவி அமைப்புகள் இஸ்ரேல், அமெரிக்க ஆதரவுடன் செயல்படும் நிவாரண விநியோக அமைப்பைக் கலைக்கக் கோரிக்கை விடுத்துள்ளன. சமீபத்திய நாட்களில் உணவுக்காகக் காத்திருந்த பல பாலஸ்தீனியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது உலக அளவில் பெரும் விமர்சனங்களை உருவாக்கியுள்ளது.

ஸ்பெயினின்

# 100 ஆண்டுகளில் இல்லாத வெயில்


ஸ்பெயினில் 100 ஆண்டுகளில் இல்லாத வெயில் வாட்டி வதைப்பதாக அந்நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

ஸ்பெயினின் 2ஆவது பெரிய நகரமான பார்சிலோனாவில் ஒரு நாளின் அதிகபட்ச வெப்பநிலை 100 டிகிரியைத் தாண்டி பதிவாகியுள்ளது.

இது கடந்த 100 ஆண்டுகளில் பதிவான அதிகபட்ச வெப்பநிலை என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, பகல் நேரங்களில் மக்கள் அவசியமின்றி வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என பொதுமக்களை அரசாங்கம் அறிவுறுத்தி உள்ளது.

காலநிலை மாற்றம் என்பது உலகம் சந்திக்கும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று ஆகும். இதனால் உலக வெப்பமயமாதல், பனிப்பாறை உருகுதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.




ரஷ்யா

### ஊழல் வழக்கில் ரஷ்ய

# அமைச்சருக்கு 13 ஆண்டுகள் சிறை

இராணுவத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தை தைமூர் இவானாவ் முறைகேடு செய்ததாக புகார்கள் எழுந்துள்ளதையடுத்து,ரஷ்ய அமைச்சருக்கு 13 ஆண்டுகள் சிறை விதிக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய நாட்டின் துணை பாதுகாப்பு துறை அமைச்சராக இருந்தவர் தைமூர் இவானாவ். உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்ய இராணுவ மந்திரியாக இருந்த செர்ஜி ஷொய்குக்கு வலதுக்கரமாக செயல்பட்டு வந்தார்.



இந்தநிலையில்,போர் தொடங்கி 3 ஆண்டுகளாக நீடித்து வரும் நிலையில்,போரை பயன்படுத்தி இராணுவத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தை இவர் முறைகேடு செய்ததாக புகார்கள் எழுந்தன.

இதன்பேரில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தைமூர் இவானாவின் பதவி பறிக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டார்.

இந்த ஊழல் வழக்கு தொடர்பாக மாஸ்கோ கோர்ட்டில் விசாரணை நடத்தப்பட்டது. ரூ.427 கோடி (50 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) ஊழல் செய்தது தெரிந்தது.

இதனை தொடர்ந்து தைமூர் இவானாவுக்கு 13 ஆண்டுகள் சிறை தண்டனை அளித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

ரஷ்யh

# தலாய் லாமா அதிரடி அறிவிப்பு

600 ஆண்டுகள் பழைமையான தனது அறக்கட்டளை தன்னுடைய மரணத்திற்குப் பிறகும் தொடரும் என்று புத்த மதகுரு தலாய் லாமா முறையாக உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தலாய் லாமா தனது எக்ஸ் பக்கத்தில் ஜூலை 2 அன்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு



தெரிவித்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, 2011 செப்டெம்பர் 24 அன்று, திபெத்திய ஆன்மிக மரபுகளின் தலைவர்கள் கூட்டத்தில் நான் ஓர் அறிக்கை வெளியிட்டேன். திபெத்துக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள சக திபெத்தியர்கள், திபெத்திய பவுத்தத்தைப் பின்பற்றுபவர்கள், திபெத்தியர்களுடன் தொடர்பு கொண்டவர்களுக்கான அந்த அறிக்கையில், தலாய் லாமாவின் அறக்கட்டளை தொடர வேண்டுமா என்று கேட்டிருந்தேன்.

புதுடெல்லி

### 5 நாடுகளுக்கான பயணத்தை

# தொடங்கினார் பிரதமர் மோடி

ஐந்து நாடுகளுக்கான தனது பயணத்தை செவ்வாய்க்கிழமை (02) அன்று தொடங்கிய பிரதமர் நரேந்திர மோடி, செவ்வாய்க்கிழமை(02) மாலை கானா அதிபரைச் சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க பிரேசில் செல்லும் வழியில் கானா, டிரினிடாட் & டொபாகோ, அர்ஜென்டினா மற்றும் நமீபியா ஆகிய நாடுகளுக்கு பிரதமர் மோடி இன்று முதல் 9ஆம் திகதி வரை பயணம் மேற்கொள்கிறார். இதற்காக, டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் பிரதமர் நரேந்திர மோடி இன்று காலை புறப்பட்டுச் சென்றார். இன்று மாலை அவர் கானா சென்றடைகிறார்.



### கழக உலகக் கிண்ணம்:

# ஜூவென்டஸை வென்று காலிறுதியில் றியல்



சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் புதன்கிழமை (02) அதிகாலை நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸுடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு றியல் தகுதி பெற்றுள்ளது.

றியல் சார்பாகப் பெறப்பட்ட கோலை கொன்ஸலோ கர்சியா பெற்றிருந்தார்.

### இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட்:

# அவுஸ்திரேலியாவை வீழ்த்துமா மேற்கிந்தியத் தீவுகள்?

மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது கிரெனடாவில் இன்றிரவு 7.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்ற நிலையில், இப்போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு சவாலளிக்க வேண்டுமாயின் மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாட்டவீரர்களிடமிருந்து குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் வேண்டுமாக இருக்கிறது.

சிரேஷ்ட வீரரான கிறேய்க் பிறத்வெய்ட்டிடமிருந்து பங்களிப்புகள் எதிர்பார்க்கப்படுவதோடு, பிரெண்டன் சிங்க், கேசி கார்ட்டியிடமிருந்தும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றது.



மறுபக்கமாக விரல் என்பு முறிவிலிருந்து குணமடைந்த ஸ்டீவன் ஸ்மித், அவுஸ்திரேலிய அணியில் ஜொஷ் இங்லிஸை பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர அணிகளில் வேறெந்த மாற்றங்களும் இருக்காதெனக் கருதப்படுகின்ற நிலையில், சாம் கொன்ஸ்டாஸ், கமரன் கிறீன் ஆகியோர் துடுப்பாட்டவரிசையில் தமது நிலைகளை நிரூபித்துக் காண்பிக்க வேண்டியுள்ளது.

முதலாவது போட்டியைப் போன்றே இப்போட்டிக்கான ஆடுகளமும் வேகப்பந்துவீச்சுக்கு சாதகமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.


### தேசியத்தில் முதலிடம்:

# பயிற்சியளித்த அர்ச்சனாவுக்கு கௌரவிப்பு

■ பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய மட்ட விளையாட்டுப்போட்டியில் பரிசளிப்பு விழா திங்கட்கிழமை(30) அன்று நடைபெற்றபோது 2024ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டியில் மட்டக்களப்பு - மட்டக்களப்பு மேற்கு காயன்குடா கண்ணகி வித்தியாலயத்தின் பெண்கள் எல்லே அணியை தேசிய மட்டத்தில் முதலிடம் பெறுவதற்குப் பயிற்சிகளை வழங்கிய செல்வி அரசரெட்ணம் அர்ச்சனா நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.





# லில்லியுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜிரூட்

ஐக்கிய அமெரிக்க கால்பந்தாட்டக் கழகமான லொஸ் ஏஞ்சலஸிலிருந்து விலகியதையடுத்து பிரெஞ்சு லீக் 1 கழகமன லில்லியுடன் ஓராண்டு ஒப்பந்தமொன்றில் பிரான்ஸின் முன்களவீரரான ஒலிவியர் ஜிரூட் கைச்சாத்திட்டுள்ளார்.

சர்வதேச கால்பந்தாட்டத்திலிருந்து 2024ஆம் ஆண்டு 38 வயதான ஜிரூட் ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### முதலாவது டெஸ்டில்

# சிம்பாப்வேயை வென்ற தென்னாபிரிக்கா

சிம்பாப்வேக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், புலவாயோவில் சனிக்கிழமை(28) அன்று ஆரம்பித்து செவ்வாய்க்கிழமை(01) அன்று முடிவுக்கு வந்த முதலாவது டெஸ்டை 328 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 418/9 (துடுப்பாட்டம்: லுஹான்-ட்ரீ பிறிட்டோறியஸ் 153, கோர்பின் பொஷ் ஆ.இ 100, டெவால்ட் பிறெவிஸ் 51 ஓட்டங்கள். பந்துவீச்சு: தனக சிவங்கா 4/83, பிளஸிங்க் முஸர்பனி 2/59, வின்சென்ட் மஸெகெஸா 1/97, வெலிங்டன் மஸகட்ஸா 1/109)

சிம்பாப்வே: 251/10 (துடுப்பாட்டம்: ஷோன் வில்லியம்ஸ் 137, கிறேய்க் எர்வின் 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: வியான் முல்டர் 4/50, கோடி யூசுஃப் 3/42, கேஷவ் மஹராஜ் 3/70)

தென்னாபிரிக்கா: 369/10 (துடுப்பாட்டம்: வியான் முல்டர் 147, கேஷவ் மஹராஜ் 51, கோர்பின் பொஷ் 36, கைல் வெரைன் 36 ஓட்டங்கள். பந்துவீச்சு: வெலிங்டன் மஸகட்ஸா 4/98, தனக சிவங்கா 2/76, வின்சென்ட் மஸெகெஸா 2/117, வெஸ்லி மட்ஹெவெரே 1/35, பிளஸிங்க் முஸர்பனி 1/38)

சிம்பாப்வே: 208/10 (துடுப்பாட்டம்: வெலிங்டன் மஸகட்ஸா 57, கிறேய்க் எர்வின் 49, பிளஸிங்க் முஸர்பனி ஆ.இ 32 ஓட்டங்கள். பந்துவீச்சு: கோர்பின் பொஷ் 5/43, கோடி யூசுஃப் 3/22, டெவால்ட் பிறெவிஸ் 1/22, கேஷவ் மஹராஜ் 1/71)

போட்டியின் நாயகன்: லுஹான்-ட்ரீ பிறிட்டோறியஸ்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 03, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.